# இஸ்ரவேலின் தேசீய சட்டம் என்ற வகையில் நியாயப்பிரமாணம்

*நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிற போதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது? (உபா. 4:7, 8).*

தேவன் இஸ்ரவேலர்களின் தேவனாயிருப்பதாகவும், அவர்களை ஒரு விசேஷித்த மக்களாகப் பிரித்து வைப்பதாகவும் அவர்களுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தினார் என்று நாம் கண்டுள்ளோம். அவர்கள் தேவனுடைய மக்களாய் இருப்பது எவ்விதம் என்று அவர்களுக்குப் போதிப்பதற்காகத் தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். பல்வேறு நிபந்தனைகளுடன் தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த இந்த நியாயப்பிரமாணமானது அவர்களின் தேசீய சட்டமாகவும் இருக்க வேண்டியதாயிற்று. இஸ்ரவேலானது தேவனால் ஆளுகை செய்யப்பட்ட ஒரு நாடாக, தேவ ஆட்சி நடைபெறும் நாடாக இருக்க வேண்டியதாயிற்று. குடும்ப உறவுகள், உணவு, நாட்டு விவகாரங்கள் மற்றும் சமூகப் பொறுப்புகள் ஆகியவற்றை ஆளுகை செலுத்த ஒன்றுடன் இணைந்த விதிகள் பலவற்றை நியாயப்பிரமாணம் கொண்டிருந்தது. இது தனிப்பட்ட, மதரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான கட்டுப்பாடுகளை விவரித்து உரைத்தது.

தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த சட்டங்கள் ஒரு விசேஷித்த முறைமைப்படி பதிவு செய்யப்படவில்லை. நடக்கையில் ஒரே விதமான பகுதிகளை ஆளுகை செய்யும் பல சட்டங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்கப் பட்டிருந்தன, ஆனால் அவைகளில் சில ஒன்றாக வகைப்படுத்தப் பட்டிருந்தன. இப்படிப்பட்ட வகைப்படுத்துதல்கள் தனிப்பட்ட உறவுகள், தனிநபர்க்குரிய பொறுப்புகள், குடியுரிமை விஷயங்கள், மதக் கடமைகள் மற்றும் பிற விஷயங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டன.

## ஒரு மக்களுக்கான நியாயப்பிரமாணம்

### ஒரு குறிப்பிட்ட ஜாதி

தேவன் இஸ்ரவேலருக்குச் சீனாய் மலையில் கொடுத்த நியாயப் பிரமாணமானது அதற்கு முன்பு கொடுக்கப்பட்டிருந்ததில்லை. ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் கானான் நாட்டில் வாழ்ந்திருக்கையில் அவர்களுக்கு ஒரு ஜாதிக்கான சட்டம் ஒன்று தேவைப்பட்டிருந்ததில்லை. (பின்னாளில்) எகிப்தில் இருந்த அவர்களது சந்ததியார்களுக்கும் கூட அவர்களை ஆளுகை செய்யச் சட்டம் ஒன்று தேவைப்பட்டிருந்ததில்லை, ஏனெனில் அவர்கள் எகிப்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த அடிமை மக்களாய் இருந்தனர். எகிப்தை விட்டு அவர்கள் புறப்பட்டு வரும் வரையிலும் அவர்கள் தங்களுக்கென்று சொந்தமான நாட்டுச் சட்டங்கள் தேவையாய் இருந்த ஒரு தனி நாடாக இருந்ததில்லை. தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததினால் சூழ்நிலையைச் சீர்படுத்தினார்.

"இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?" (உபா. 4:8) என்று மறைமுகமாய்க் குறிப்பிட்டார்.

தாவீது பின்வருமாறு எழுதினார்:

> யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும்,
> இஸ்ரவேலுக்குத் தமது
> பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார்.
> அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை;
> அவருடைய நியாயங்களை அறியாமற் போகிறார்கள்.
> அல்லேலூயா! (சங். 147:19, 20).

பவுலும் கூட இந்த சத்தியத்தைப் போதித்தார்: "அன்றியும் நியாயப் பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்'' (ரோமர் 2:14). நியாயப்பிரமாணம் இல்லாதவர்கள் இருந்தனர் என்பதையும் பவுல் 1 கொரி. 9:21ல் குறிப்பிட்டிருந்தார். நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்து பாவம் செய்கிறவர்கள் மட்டுமே நியாயப்பிரமாணத்தின்படி நியாயந் தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:12).

பத்துக் கட்டளைகளின் விரிவாக்கமான நியாயப்பிரமாணமானது (யாத். 34:27, 28; 1 இரா. 8:9, 21) இஸ்ரவேலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. தேவன் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருந்த இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாய் இருந்தனர்.

## ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி

தேவனால் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையானது இஸ்ரவேலின் நிலத்தில் கீழ்ப்படியப்பட வேண்டியதாக இருந்தது, ஏனெனில் அதன் சில சட்டங்களின் இயல்பே அவற்றை அவர்களின் நாட்டு எல்லைகளுக்குப் புறம்பே இருந்து கடைப்பிடிப்பதைக் கடினமானதாக்கியிருந்தன. மோசே, "நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்" என்று கூறினார் (உபா. 4:5; 6:1, 2ஐயும் காணவும்).

## ஒரு குறிப்பிட்ட நகரம்

தேவன் தாம் தேர்ந்து கொண்ட இடத்தில் இஸ்ரவேல் மக்கள் தம்மை நாடும்படிக் கட்டளையிட்டார் (உபா. 12:5-7). இந்த இடமானது, "கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேம்" நகராய் இருந்தது (1 இரா. 14:21ஆ; 1 இரா. 11:13; 2 இரா. 21:4, 7ஐயும் காணவும்). இஸ்ரவேல் நாட்டின் வெளிப்புற விளிம்புகளில் வாழ்ந்திருந்த சிலருக்கு எருசலேம் செல்வதென்பது மாபெரும் முயற்சி தேவைப்படும் செயலாக இருந்திருக்கலாம், ஆனால் பூமியின் எல்லா மக்களும் அதைக் கடைப்பிடிக்கும்படி கூறப்பட்டிருந்தால், அது பெரும்பாலும் முடியாத செயலாகவே இருந்திருக்கும்.

இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் சென்ற பொழுது அவர்கள் பின்வரும் செயலைச் செய்யும்படி தேவன் அறிவுறுத்தினார்:

> உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்; அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசம பாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவந்து (உபா. 12:11; 26:2ஐயும் காணவும்).

மக்கள் தங்கள் தானியங்களின் தசம பாகம் அல்லது தங்கள் மந்தையின் தலையீற்றுக்கள் ஆகியவற்றை எருசலேம் என்ற இந்த இடத்தில் மட்டுமே புசிக்க வேண்டியதாய் இருந்தது. தேவன் தேர்ந்து கொண்டிருந்த இந்த இடத்திற்கு அவைகளைக் கொண்டு செல்ல முடியாத அளவு தூர இடங்களில் அவர்கள் வாழ்ந்திருந்தால் அவற்றை அவர்கள் பணமாய் மாற்றி, தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட இடத்திற்குச் சென்று அவர்கள் அங்கு விற்பவற்றை வாங்கிப் புசிக்க வேண்டியிருந்தது (உபா. 12:17-22, 26-28; 14:23-26).

*தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட நகரமே எல்லாப் பலிகளையும் செலுத்த வேண்டிய இடமாக இருந்தது (உபா. 12:13, 14, 26). வருடாந்திரப் பண்டிகைகள் மூன்றும் (பஸ்கா, வாரங்களின் பண்டிகை மற்றும் கூடாரப் பண்டிகை; உபா. 16:2-15) அங்கேயே கடைப்பிடிக்கப்பட வேண்டியவை களாய் இருந்தன. இந்தப் பண்டிகைகளின் போது எல்லா ஆண்களும் அங்கு (எருசலேமில்) இருக்க வேண்டியதாயிற்று (உபா. 16:16).*

*நீதிமன்ற வழக்குகள் இந்த நகரிலேயே ஆசாரியர்களால் விசாரிக்கப்பட வேண்டியவைகளாயிருந்தன (உபா. 17:8-13). ஒவ்வொரு ஏழாம் ஆண்டின் கூடாரப் பண்டிகையின்போதும் நியாயப்பிரமாணமானது இந்த இடத்தில் வாசிக்கப்பட வேண்டியதாய் இருந்தது (உபா. 31:10, 11).*

## தேவனிடத்திலிருந்து வந்த ஒரு நியாயப்பிரமாணம்

*இஸ்ரவேலருக்கு மோசே கற்பித்த சட்டங்கள் நியாயங்கள் யாவும் தேவன் கட்டளையிட்டிருந்தவைகள் என்று மோசே எடுத்துரைத்தார். இவைகள் தேவனுடைய கட்டளைகளே தவிர, மோசேயினால் கண்டுபிடிக்கப்பட்ட விதிகளும் முறைமைகளும் அல்ல. லேவியராகமத்தில் இந்தக் கட்டளைகளைக் கொடுத்த பிறகு, மோசே ''இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி கர்த்தர் சீனாய் மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே" (லேவி. 27:34) என்று எழுதினார்.*

*நியாயப்பிரமாணத்தின் இந்தக் கட்டளைகளையும், சட்டங்களையும் மற்றும் நியாயங்களையும் கொடுத்த பொழுது மோசே இஸ்ரவேலர்களுக்கு இவை தேவனிடமிருந்து வந்தவை என்று மீண்டும் நினைவூட்டினார், அது அவை மோசேயிடமிருந்து வந்தவையல்ல என்று அர்த்தப்படுத்துவதா யிருந்தது. இந்தக் கூற்றுக்களின் மாதிரி ஒன்று இங்கு தரப்படுகின்றது: "கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின் படியும், ... நீங்கள் செய்யாமல், அறியாமல் தவறி நடந்தாலும் ...'' (எண். 15:22-24); ''ஆகையால் நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளின் படியும் அவருடைய கட்டளைகளின்படியும் செய்வாயாக" (உபா. 27:10).[1] "கர்த்தர் மோசேயிடத்தில் பேசி" (லேவி. 18:1; 19:1; 20:1; எண். 8:23; 15:1) என்பது போன்ற கூற்றுக்கள், இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது தேவனுடைய நியாயப்பிரமாணமாயிருந்தது என்றும் அது மோசேயிடம் தொடக்கம் பெற்ற பிரமாணம் அல்ல என்றும் சுட்டிக்காட்டுகின்றன.*

*மோசே கட்டளையிட்டது தேவனிடமிருந்து வந்தது என்ற உண்மையை வலுவாய் உரைப்பவர்களாய் நாம் காணப்படுகையில், சாட்சியத்தின் கனாகனத்தை முன் வைப்பது அவசியமானதாக உள்ளது. சில மக்கள், "மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும்" மற்றும் "தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கும்'' இடையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு வித்தியாசமானது பழைய*

அல்லது புதிய ஏற்பாடுகளில் அடிப்படைக் கருத்துக்கள் எதையும் கொண்டிருப்பதில்லை. தேவன் மோசேயின் மூலமாக கொடுத்த எல்லாம் - தேவனுடைய கட்டளைகள், சட்டங்கள், நியாயங்கள் மற்றும் விதிகள் எல்லாம் - நியாயப்பிரமாணமாக இருந்தது. சிலவேளைகளில் இது "மோசேயின் நியாயப்பிரமாணம்" (யோசு. 8:31; 1 இரா. 2:3) என்று அழைக்கப்பட்டிருப்பினும், இது அவருடைய நியாயப்பிரமாணம் அல்ல. இதே வழி வகையிலேயே, சுவிசேஷமும் அதன் போதனைகள் யாவும் கிறிஸ்துவினுடையவைகளாய் இருப்பினும் பவுல் "என்னுடைய சுவிசேஷம்" என்று குறிப்பிட்டார் (ரோமர் 2:16; 16:25) மற்றும் நாம் "அப்போஸ்தலருடைய உபதேசம்" என்ற சொற்றொடரைப் பயன் படுத்துகின்றோம் (அப். 2:42).

## தண்டனைகளுடன் ஒரு நியாயப்பிரமாணம்

இந்தப் பிரமாணங்களில் எதையேனும் மீறுதல் என்பது குறிப்பிட்ட தண்டனைகளை விளைவித்தது . பல மீறுதல்கள் மரணத்தினால் தண்டனையளிப்பதை அவசியமானதாகக் கொண்டிருக்கையில், மற்றவைகள் குற்றம் செய்தவன் குற்றத்திற்கான இழப்பீடு செய்தலையோ அல்லது அவன் செய்த அதே தவறு அவனுக்குத் திருப்பிச் செய்யப் படுதலையோ அவசியமான தாகக் கொண்டிருந்தன. குற்றமிழைக்கப்பட்ட நபருடன் காரியங்களைச் சரிப்படுத்திக் கொள்வதுடன் கூட, அறியாமல் செய்த மீறுதல்களுக்கு சரியான பலி செலுத்துதல் மூலமாக தேவனுக்கு காணிக்கைகள் ஏற்படுத்தப் பட வேண்டியிருந்தது (லேவி. 4:27-35). இன்றைய நாட்களில் சில சட்டமுறைமைகளினால் நீதிமன்றத்தில் தண்டத் தொகை செலுத்தும்படி கேட்கப்படுவதற்கு மாறாக தேவன், இழப்பீடு மற்றும்/அல்லது பலி ஆகியவற்றை அவசியமாக்கினார்.

## முடிவுரை

மோசேயின் மூலம் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த சட்டங்கள் ஒரு நாட்டவர் என்ற வகையில் அவர்கள் கீழ்ப்படியும்படியாகத் திட்ட வட்டமாக அவர்களுக்காகவே கொடுக்கப்பட்டன, அவை பிற மக்கள் எவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தச் சட்டங்கள் மக்களின் தனிப்பட்ட, குடிமை மற்றும் மதவாழ்வுகளின் பெரும்பாலான அம்சங்களை ஆளுகை செய்தன. இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலானது இஸ்ரவேலரை தேவனுடைய தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாகத் தனிப்படுத்தி வைப்பதாய் இருந்தது.

---

குறிப்பு

[1]இதே போன்ற கூற்றுக்கள் உபா. 4:40; 8:11; 10:13; 11:27, 28; 13:18; 28:1, 13, 15; 30:8 ஆகியவற்றிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.